திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருவேற்காடு நகராட்சி பகுதியில் 71 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய ரேஷன் கடை, பேருந்து நிழல் குடை, புதிய தார் சாலை அமைக்கும் பணிகளை சிறுபான்மை மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார் உடன் நகர மன்ற தலைவர் என்.இ.கே. மூர்த்தி உள்பட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் வட்டக் கழகச் செயலாளர்கள் உள்ளனர்.

### திருவேற்காடு நகராட்சி பகுதியில் ரூ. 71 லட்சம் மதிப்பீட்டில்

# புதிய ரேஷன் கடை, பேருந்து நிழல் குடை, புதிய தார் சாலை அமைக்கும் பணி!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்தார்!

திருவள்ளூர் செப்.07;

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட திருவேற்காடு நகராட்சி பகுதியில் ஆவடி சட்ட மன்ற தொகுதி மேம்பாட்டு நிதி, மற்றும் 15வது நிதிக்குழு மேம்பாட்டு மானியத்திலிருந்து 71 லட்சம் மதிப்பீட்டில் புதிய ரேஷன் கடை, பேருந்து நிழல் குடை புதிய தார் சாலை துவக்க விழாக்கள் நடைபெற்றது

இதில் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு திருவேற்காடு நகராட்சி 5 வார்டியில் புதிய ரேஷன் கடை 11 வது வார்டு திருவேற்காடு நகராட்சி எதிரில் புதிய பேருந்து நிறுத்தம் அமைக்க அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்து 6,8,9, ஆகிய வார்டுகளில் தார் சாலை அமைக்க பணிகளை தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார்

இந்நிகழ்ச்சியில் திருவேற்காடு நகரக் கழக செயலாளர் நகர் மன்ற தலைவருமான என்.இ.கே.மூர்த்தி, திருவேற்காடு நகராட்சி ஆணையர் தட்சிணாமூர்த்தி, நகர் மன்ற துணைத் தலைவர் ஆனந்தி ரமேஷ்,

பொதுக்குழு உறுப்பினர் எஸ்.சங்கர், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜெ. பவுல், வார்டு செயலாளர்கள் கவுன்சிலர்கள் பு.பரிசு முத்து, டி.வி.இளங்கோவன், பிரதானம், துரை கோபால், நிர்வாகிகள் பெஞ்சமின், நடராஜ், இ.செல்லதுரை, இளையராஜா, சாந்தி ராஜா, அப்பு(எ) ஜெபராஜ், என்.ராஜ், ஆ.நாராயணன், மு.சுரேஷ், நரேஷ், குடியரசு, பேபிஸ்ரீ, நூர்பல் ஆசைதம்பி, அமலேஷ்வரி, மற்றும் கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திரு வேற்காடு நகராட்சி பகுதியில் 71 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய ரேஷன் கடை, பேருந்து நிழல் குடை, புதிய தார் சாலை அமைக்கும் பணிகளை சிறுபான்மை மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார் .

உடன் நகர மன்ற தலைவர் என்.இ.கே.மூர்த்தி உள்பட அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் வட்டக் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி தாம்பரம் மாநகராட்சி 9வது, 13வது மற்றும் 23 வது வார்டுகளில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெற்றது. மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ முகாமை துவக்கி வைத்து பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்று உரிய நடவடிக்கை எடுத்து சான்றிதழ்கள் கர்ப்பிணிகளுக்கு பெண்கள் ஊட்டச்சத்து பெட்டகம் இல்லம் தேடி மருத்துவம் பயனாளிகளுக்கு மருந்துகள் அடங்கிய பெட்டகம் ஆகிய நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அப்பொழுது மாநகராட்சி துணை மேயர் கோ. காமராஜ், மாநகராட்சி துணை ஆணையர்கள், உதவி செயற்பொறியாளர், பல்வேறு துறை அதிகாரிகள், செம்பாக்கம் வடக்கு பகுதி கழகசெயலாளர் ஏ. கே. கருணாகரன், மாமன்ற உறுப்பினர்கள் லதா சிவக்குமார், ரேணுகா தேவி, பரமசிவம், ஆண்டாள் கண்ணன், கழக நிர்வாகிகள் ச. சிவக்குமார் தே. இளங்கோவன் ஜி. கருணாமூர்த்தி பி. பரமசிவம் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

### பூவிருந்தவல்லியில் நடைபெற்ற

# “நலன் காக்கும் ஸ்டாலின்” திட்ட மருத்துவ முகாம்!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொடங்கி வைத்து பார்வையிட்டார்!

திருவள்ளூர் செப் 07;

தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைகிணங்க திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம், காட்டுப்பாக்கம் எ.வி.எல். மேல் நிலைப் பள்ளியில் மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வு துறை சார்பில் நடைபெற்ற “நலன் காக்கும் ஸ்டாலின்” சிறப்புத் திட்ட மருத்துவ முகாமினை

சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்

அமைச்சர் கூறியதாவது, “நலம் காக்கும் ஸ்டாலின்” சிறப்பு மருத்துவ முகாம் தமிழகம் முழுவதும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது. இதில் 17 பிரிவுகளில் சிறப்பு மருத்துவர்களை கொண்டு பொது மக்களுக்கு சேவை வழங்கப்படுகின்றது. திருவள்ளூர் மாவட்டத்தில் ஆவடி மாநகராட்சியில் முதல் முகாம் சிறப்பாக நடைபெற்று, ஏறத்தாழ 1500 க்கும் மேற்பட்ட மக்கள் பயன்பெற்றனர்.

அதன் தொடர்ச்சியாக சோழவரம், பள்ளிப்பட்டு, எல்லாபுரம் ஆகிய வட்டாரங்களில் நடைபெற்று இதுகாறும் 6724 நபர்கள் பயனடைந்து உள்ளனர். இன்று 5வது முகாம் பூவிருந்தவல்லி வட்டாரம் காட்டுப்பாக்கத்தில் மிக சிறப்பாக நடைபெற்று கொண்டு இருக்கின்றது

இம்முகாமில் கணினி மூலம் பதிவு மேற்கொள்ளப்பட்டு இரத்த பரிசோதனை முடிவுகளும் வழங்கப்படுகின்றது. பொது மருத்துவம், இருதய மருத்துவம்,கண் மருத்துவம்,காது மூக்கு தொண்டை மருத்துவம் ,பல் மருத்துவம்நரம்பியல் மருத்துவம்,எலும்பு மருத்துவம்,கர்ப்பிணிகள் (ம) பெண்கள் சிறப்பு மருத்துவம் மன நல மருத்துவம் போன்ற சிறப்பு பிரிவுகள் உள்ளது.

மேலும் இசிஜி, எக்ஸ்ரே, ஸ்கேன் வசதியும் உள்ளது. தனி கவனமாக மாற்று திறனாளிகள் நல வாரியம் மூலமாக சான்றிதழ் வழங்குதல் மற்றும் முதலமைச்சர் காப்பீட்டு திட்டத்திற்கு பதிவும் செய்யப்படுகின்றது. முக்கிய நிகழ்வாக தூய்மை காவலர்கள் (ம) துப்புரவு பணியாளர்களுக்கு பரிசோதனை செய்து அடையாள அட்டைகளும் வழங்கப்படுகின்றது. இவ்வாறு அமைச்சர் அவர்கள் கூறினார்.

முன்னதாக 50 கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு சீர் பொருட்களையும் மற்றும் 146 தூய்மை பணியார்களுக்கான உறுப்பினர் அடையாள அட்டைகளையும் அமைச்சர் வழங்கினார்

இம்முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், , பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, ஒன்றிய கழக செயலாளர் ப.ச.கமலேஷ், இணை இயக்குனர் (மருத்துவம் மற்றும் ஊரக நல பணிகள்) அம்பிகா சண்முகம், மாவட்ட சுகாதார அலுவலர்கள் பிரியா ராஜ், பிரபாகரன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

### சென்னை மாநகராட்சி சார்பில் பாலங்கள் – மேம்பாலங்கள் உள்ளிட்ட

# 22 குளங்களில் தூர் வாரி மேம்படுத்தும் பணி!

## மேயர் பிரியா தொடங்கி வைத்து ஆய்வு செய்தார்!

சென்னை.செப்.7-

வளசரவாக்கம் மண்டலம் கூவம் ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு வரும் இரண்டு பாலங்கள், தியாகராயநகர் தெற்கு உஸ்மான் சாலையில் கட்டப்பட்டு வரும் மேம்பாலம் ஆகியவற்றினைப் பார்வையிட்டு நேற்று (06.09.2025) மேயர் திருமதி ஆர். பிரியா ஆய்வு செய்தார். இதனைத் தொடர்ந்து, சோழிங்கநல்லூர் மண்டலத்தில் ரெட்டைக் குட்டை தாங்கல் குளம் உள்ளிட்ட 22 குளங்களில் தூர் வாரி மேம்படுத்தும் பணிகளைத் தொடங்கி வைத்து, சோழிங்கநல்லூர் மண்டலத்தில் நடைபெற்றுவரும் திட்டப்பணிகளை ஆய்வு செய்தார்.

வளசரவாக்கம் மண்டலம், சன்னதி தெருவில் கூவம் ஆற்றின் குறுக்கே பூந்தமல்லி நெடுஞ்சாலையினையும் யூனியன் சாலையினையும் இணைக்கும் வகையில் ரூபாய் 31.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் உயர் மட்டப் பாலத்தினையும், சின்ன நொளம்பூரில் பூந்தமல்லி நெடுஞ்சாலையினையும் யூனியன் சாலையினையும் இணைக்கும் வகையில் ரூபாய் 42.71 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் உயர்மட்டப் பாலத்தின் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இப்பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, மேயர் அவர்கள், கோடம்பாக்கம் மண்டலத்தில் ரூபாய் 162.92 கோடி மதிப்பீட்டில் தெற்கு உஸ்மான் சாலை மற்றும் சிஜடி நகர் பிரதான சாலையில் மேம்பாலம் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். போக்குவரத்துக்கு இடையூறின்றி பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர், சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு 200ல் ரெட்டைக்குட்டை தாங்கல் குளம் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சோழிங்கநல்லூர், பெருங்குடி, அம்பத்தூர் ஆகிய மண்டலங்களில் ரெட்டைக்குட்டை தாங்கல் குளம் உள்ளிட்ட 22 குளங்களை தூர்வாரி கொள்ளளவை அதிகரித்து மேம்படுத்தும் நீர் மேலாண்மைப் பணிகளை மேயர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

சமூகப் பொறுப்பு நிதியின் கீழ் 22 குளங்களை மறுசீரமைப்பதற்காக பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், இந்திய சுற்றுச்சூழல் அறக்கட்டளையின் வாயிலாக (Environmentalist Foundation of India) இந்த 22 குளங்களில் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

பெருங்குடி மண்டலத்தில், (மண்டலம் 14) தாமரைக்குளம், அமர குளம், கிளிஞ்சல் குளம், மாடம்பாக்கம் குளம் 1, மாடம்பாக்கம் குளம் 2.

சோழிங்கநல்லூர் மண்டலத்தில் (மண்டலம் 15), ஷாலிமர் தோட்டம் 2வது தெரு குளம், பெரிய கேணிக்குளம், கண்ணகி நகர் 17வது பிரதான வீதி குளம், உழவர்கேணி தாங்கல் குளம், அல்லிக்குளம், பிள்ளையார் கோவில் விக்கினி க்குளம் கேணி குளம், புதுச்சேரி கேணி, வண்ணான் குளம், ராமன் தாங்கல் ஏரி, ராஜீவ் காந்தி நகர் குளம், பெரிய தாமரைக்குளம், தாங்கல் ஏரி, ரெட்டை குட்டை தாங்கல் குளம்.

அம்பத்தூர் மண்டலத்தில் (மண்டலம் 7), அர்ரகுளம் ஆகிய 22 குளங்களை இந்திய சுற்றுச்சூழல் அறக்கட்டளையின் (Environmentalist Foundation of India) வாயிலாக சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த பணியில் குளங்களில் உள்ள ஆகாயத்தாமரை அகற்றுதல், பறவைகளுக்கான தீவுகள் அமைத்தல், மரங்கள் நடுதல், சூரிய சக்தியில் இயங்கும் நீரூற்று, நடைபாதை, மின்விளக்கு வசதி, சுற்றிலும் வேலி அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும். இந்த குளங்களை புனரமைப்பதன் மூலம் நீர் கொள்ளளவு அதிகரித்திடும். மேலும், இப்பகுதிகளில் வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகள் குறைந்து பயனளித்திடும்.

முன்னதாக, ராமன் தாங்கள் ஏரி, தாங்கல் ஏரி ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஒக்கியம் மடு கால்வாயில் தற்போது, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தினால் கட்டப்பட்டுவரும் பாலத்தின் வழியே மழைக்காலத்தில் தங்குதடையின்றி நீர் செல்வதை உறுதி செய்திட வேண்டுமென அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு 199 நெடுஞ்செழியன் சாலையில் (ஓ எம் ஆர் சாலையில்) உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான வணிகவளாகப்பகுதியில் பல்வேறு வசதிகளுடன் புதிய வணிக வளாகம் அமைப்பது குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்தார். தொடர்ந்து, செம்மஞ்சேரி உப்பு வாரியத்தின் நிலப்பகுதியில் உள்ள குடியிருப்பில் உள்ள மக்களின் கோரிக்கையின்படி குடிநீர் வழங்குதல் மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு வழங்குவது தொடர்பாக அப்பகுதியினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வுகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் கா. கணபதி (மதுரவாயல்), ஜெ. கருணாநிதி (தியாகராயநகர்), எஸ். அரவிந்த் ரமேஷ் (சோழிங்கநல்லூர்), மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், துணை ஆணையர்கள் வி. சிவகிருஷ்ணமூர்த்தி, (பணிகள்), எச்.ஆர். கௌஷிக், (மத்திய வட்டாரம்), அஃதாப் ரசூல், (தெற்கு வட்டாரம்), மண்டலக் குழுத் தலைவர்கள் நொளம்பூர் வே. ராஜன் (வளசரவாக்கம்), எம். கிருஷ்ணமூர்த்தி, (கோடம்பாக்கம்), வி. இ. மதியழகன் (சோழிங்கநல்லூர்), இந்திய சுற்றுச்சூழல் அறக்கட்டளை நிர்வாகி அருண், மாமன்ற உறுப்பினர்கள்மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சென்னை தென்மேற்கு மாவட்ட தொழிலாளர் அணியின் புதிய நிர்வாகிகள் அறிமுக கூட்டம் நேற்று (6.9.2025) அன்று மாவட்ட அமைப்பாளர் என்.வடிவேல் தலைமையில் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு ஆலோசனை வழங்கினார். இக்கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் என்.அன்பழகன், மாவட்ட நிர்வாகிகள் எம்டிசி. கே.ராமலிங்கம், ஆ.ராஜேந்திரன், ஏ.ஆர். கார்த்திக், கே.ராஜேந்திரன், எஸ்.ராஜேந்திரன், டி.வெங்கடேசன் மற்றும் பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் தா.மோ. அன்பரசன் தலைமையில்! ஜெர்மனி – இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளில்

# முதலீடுகளை ஈர்த்து தாயகம் திரும்பும் முதல்வருக்கு உற்சாக வரவேற்பு!

## கழகத்தினருக்கு பகுதிச் செயலாளர் என்.சந்திரன் எம்.சி. வேண்டுகோள்!

சென்னை, செப். 7

ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர், மண்டலக்குழுத் தலைவர் என்.சந்திரன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

ஜெர்மனி, லண்டன், இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளில் முதலீடுகளை ஈர்த்து தாயகம் திரும்பும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நாளை (8.9.2025) திங்கங்கிழமை காலை சென்னை விமான நிலையத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் மாபெரும் வரவேற்பு வழங்க உள்ளதால்,

எனவே, ஆலந்தூர் தெற்கு பகுதிகுட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள்,மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட நிர்வாகிகள், பகுதி-வட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி பிரதிநிதிகள், இளைஞரணியினர், மாணவரணியினர், மகளிரணியினர்,பாக முகவர்கள்(BLA-2), கழக தோழர்கள், கட்டாயம் இருவர்ண கழக கொடியுடன் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பான வரவேற்பு வழங்குமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு ஆலந்தூர் தெற்குப் பகுதிச் செயலாளர், மண்டலக்குழுத் தலைவர் என்.சந்திரன் விடுத்துள்ள வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் சட்டமன்ற தொகுதி மாதவரம் தெற்கு பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி.சந்தோஷ்குமார் இல்ல திருமண வரவேற்பு விழா 06.09.2025 அன்று இரட்டைஏரி விநாயகபுரத்தில் அமைந்துள்ள சாந்தி சேஷ மஹாலில் நடைபெற்றது. இதில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி.மதன்குமார், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சி.எஸ். எஸ்.டி.சீனிவாசன், கேபிள் த.வேல் கனேசன், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள் டி.கே.வினோத், மணலி ஸ்டாலின், பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் நா.ப.புகழரசு, மனோஜ், ஆர்.எல்.லோகேஷ் பிரபு, ஜெயபிரகாஷ், சீ.கே.யுவராஜ், பி.ரூபன், வெங்கட், தீபக், தாமு, சரவணன், ஐசக், மற்றும் கழக உடன்பிறப்புகள் பங்கேற்று மணமக்களை வாழ்த்தினர்.

### தி.மு.க. இலக்கிய அணி

# மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க.இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. இலக்கிய அணியின் விருதுநகர் வடக்கு மாவட்டம் - சிவகாசி மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**விருதுநகர் வடக்கு மாவட்டம்**

**சிவகாசி மாநகரம்**

தலைவர் - எஸ்.கே. தனசேகர பாண்டியன் 2எல்/229, கட்டளைப்பட்டி ரோடு, சிவகாசி - 626123, விருதுநகர் மாவட்டம்.

துணைத் தலைவர் - பா. விஜயலட்சுமி 261/304, செங்கமல நாச்சியாபுரம் ரோடு, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

அமைப்பாளர் - பெ. ஜீவானந்தம் 180, பெரியகருப்பன் ரோடு, சிவகாசி கிழக்கு - 626189, விருதுநகர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) த. சதீஸ்குமார் 34, என். எஸ். தெரு, சிவகாசி - 626123, விருதுநகர் மாவட்டம். 2) கா. செல்வராஜ் 254, பாரதி நகர் 2வது தெரு, சிவகாசி கிழக்கு - 626189, விருதுநகர் மாவட்டம். 3) கே. ராஜேந்திரன் 578, சுப்பிரமணியபுரம் காலனி, சிவகாசி கிழக்கு - 626189, விருதுநகர் மாவட்டம். 4) இரா. நாகராஜன் சி-69, ஆலாவூரணி, அண்ணா காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம். 5) எல். பொன் முனீஸ்வரன் 66சி, பாண்டியன் நகர் 6வது தெரு, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 06-09-2025.

**வி.பி.கலைராஜன்**
செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி

பம்மல் தெற்கு பகுதி தி.மு.க. செயற்குழு கூட்டம் பகுதி கழக செயலாளர் மண்டலம் 1 குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி ஏற்பாட்டில் பகுதி அவைத் தலைவர் ப.காளேஸ்வரன் தலைமையில் பகுதி பொருளாளர் ஆர்.உமாசங்கர்,பகுதி துணை செயலாளர்கள் என்.பன்னீர்செல்வம், துரை இளங்கோவன், பா.கவிதா, மாவட்ட பிரதிநிதி பா.டில்லி, மாநகர பிரதிநிதிகள் பி.ஜே.வேந்தன், இரா. கந்தவேலு, என்.கே.ரவிச்சந்தின், சு.மனோகரன்,ஆர்.கோகுல் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்கினார். இதில் வருகிற 08.09.2025 அன்று காலை சென்னை திரும்பும் முதல்வர் கழகத் தலைவர் அவர்களுக்கு வரவேற்பு அளிப்பது. செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்பு குன்றத்தூரில் டாக்டர் அம்பேத்கர் சிலை திறப்பு பூத் வாரியாக பூத் கமிட்டி கூட்டம் நடத்துவது ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை படிவங்கள் சமர்ப்பித்தல் முப்பெரும் விழா குறித்து ஆலோசிக்கப்பட்டது.